சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்:02.03.2021

பி.வா.சா.3. பாலகுரு, த-பெ.ராமசாமிரெட்டியார்

சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 8ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

இந்த வழக்கின் 2ம் பிரதிவாதி கந்தசுப்பையனைப்ப பற்றி எனக்கு நன்றாக தெரியும். கந்தசுப்பையனுக்கும், 8ம் பிரதிவாதிக்கும் கடந்த 1976ம் வருடம் வடமலைக்குறிச்சியில் வைத்து திருமணம் நடந்தது என்றால் சரிதான். நானும் எனது தந்தையும் திருமணத்திற்கு சென்றோம். அந்த திருமணம் இந்து முறைப்படிதான் நடைபெற்றது என்றால் சரிதான். திருமணத்தின் பலனாக மேற்படியாருக்கு குழந்தை எதுவும் இல்லை என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு இருவரும் பல வருடம் மனஸ்தாபம் ஏற்பட்டு பிரிந்து வாழ்ந்தார்கள் என்றால் அவ்வப்போது பிரிந்தும், சேர்ந்து வாழ்ந்து வந்தார்கள். கந்தசுப்பையன் இவ்வழக்கின் 6ம் பிரதிவாதி சாந்தி என்பவரை திருமணம் முடிக்காமல் சேர்த்து வைத்திருந்தார் என்றால் அது விவரம் எனக்கு தற்போதுதான் தெரியும். கந்தசுப்பையனுக்கும் பாக்கியலட்சுமிக்கும் இடையே ஜீவனாம்ச வழக்கு நடைபெற்ற விவரம் எனக்கு தெரியும், அருப்புக்கோட்டை நீதிமன்றத்தில் வைத்து நடைபெற்றது. பாக்கியலட்சுமி இந்த வழக்கில் என்ன கட்சி செய்கிறார் என்றால் கணவரின் பாகம் அவருக்கு ஒதுக்குமாறு கேட்டுள்ளார். கடந்த 2015ல் கந்தசுப்பையன் இறந்துவிட்டார், அவர்களுக்கு எந்த வாரிசும் இல்லாத காரணத்தினாலும், வழக்கு சொத்தில் கந்தசுப்பையனுக்கு உரிய பங்கு இந்த 8ம் பிரதிவாதிக்கு கிடைக்கக்கூடியது என்றும் சொன்னால் எனக்கு ஆட்சேபனை இல்லை.

(3,4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)